# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**Sessions Case No. 25/2022**

Deposition of witness for : PW2

Name : முத்தாயி

Husband's Name : நாச்சிமுத்து

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 14th day of October 2024.

**முதல் விசாரணை:–**

நான் உப்பு பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டு குடித்தனமாக இருக்கிறேன். 1வது எதிரி என் கணவர். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. இறந்துபோன சேகர் (எ) ராமசாமி எனது மகன். அ.சா–1 எனது மகள். சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு 9.30 மணிக்கு தண்ணீர் திருப்ப நானும், எனது கணவரும் சென்று பார்த்தபோது எனது மகன் வண்டி தடத்தில் மல்லார்ந்த நிலையில் கிடந்தார். எனது மகளுக்கு எனது பெரியமாமா பேரன் போன் செய்தார். என் மகளும், அவரது கணவர் பழனிசாமியும்

வந்தார்கள். அவர்கள் வந்து பார்த்து சங்ககிரி போலிசில் எழுதி கொடுத்தார்கள். போலிசார் என் மகளை விசாரணை செய்தார்கள். எனது மகள் தான் இறந்த பிறகு வந்தோம் என்று சொன்னார். என் மகன் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியவில்லை.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 03.03.2021ம் தேதி மாலை 6.00 மணி சுமாருக்கு எனது மகன், அவரது TN 52 B 8444 என்ற இருசக்கர வாகனம் TVS XL ஓட்டிக்கொண்டு வீட்டிலிருந்து சங்ககிரி பக்கம் போனார் என்றும், பிறகு இரவு 9.00 மணியளவில் எனது கணவர் தென்னமரத்திற்கு தண்ணிவிட போனார் என்றும், சிறிது நேரத்தில் எனது மகன் இறந்துகிடப்பதாக பதறி போய் என் கணவர் வீட்டிற்கு வந்தார் என்றும், பிறகு நான் சென்று பார்த்தபோது எனது மகனுக்கு வலது கண் புருவம், மார்பின் இடதுபுறம், இரண்டு கால்கள், நெற்றியின் இடதுபுறம், வலது கை மோதிர விரல் ஆகிய இடங்களில் இரத்தகாயத்துடன் மல்லார்ந்த நிலையில் இறந்து கிடந்தார் என்றும், அருகில் மேற்படி இருசக்கர வாகனம் சாய்ந்த நிலையில் இருந்தது என்றும், அதன் அருகே சைக்கிள்களுக்கு காத்து அடிக்கும் பம்பு கிடந்தது என்றும், யாரோ ஏதோ காரணத்திற்காக எனது மகனை கொலை செய்துவிட்டதாக, எனது மகள் சங்ககிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது 1ம் எதிரி என் கணவர் என்பதால் எதிரிகளுக்கு சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஒம்/– L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.